## September 24, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. பாலஸ்தீனத்தை தனி நாடாக பிரான்ஸும் அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளது.
   i. ஏற்கெனவே, பிரிட்டன், கனடா, ஆஸ்திரேலியா, போர்ச்சுகல் ஆகிய நாடுகள் பாலஸ்தீனத்தை அதிகாரபூர்வமாக அங்கீகரித்தன. அதனைத் தொடர்ந்துதற்போது பிரான்ஸ்மட்டுமின்றி, லக்ஸம்பர்க், மால்டா, மொனாக்கோ, அண்டோரா, பெல்ஜியம் நாடுகளும் ஆகிய பாலஸ்தீனத்தை தனி நாடாக அதிகாரபூர்வமாக அங்கீகரித்துள்ளன.
   ii. ஏற்கெனவே இந்தியா உள்ளிட்ட சுமார் 140 நாடுகள் பாலஸ் தீனத்தை அங்கீகரித்துள்ளன. ஆனால் உலகின் சக்திவாய்ந்த நாடுகளின் கூட்டமைப்பான ஜி7 உறுப்பு நாடுகள் தற்போது பாலஸ்தீனத்தை அங்கீகரித்துள்ளது அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.
2. பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை குறைக்கும் விதமாக குறிப்பிட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகளுக்கு சில பேரிடர் மேலாண்மைப் பணிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.
   i. அனைத்து வகையான பேரிடர்களையும் ஒரே அமைச்சகம் கையாள்வதற்குப் பதிலாக பேரிடரின் தன்மைக்கேற்ப குறிப்பிட்ட அமைச்சகங்கள் மற்றும் துறைகள் நிவாரணம், தடுப்புப் பணியை மேற்கொள்வதற்கு ஏதுவாக இந்த சீர்திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளதுது.
   ii. இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், பனிச்சரிவு, நீர்நிலைகளில் எண்ணெய் கசிவு போன்ற சீற்றங்களை கையாளும் பொறுப்பு பாதுகாப்புத் துறை அமைச்சகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
   iii. புயல், சூறாவளி, பனிமூட்டம், நிலஅதிர்வு, வெப்ப அலை, மின்னல், ஆலங்கட்டி மழை மற்றும் பலத்த மழை தொடர்பான முன்னெச்ச ரிக்கையை வழங்கும் பணியை மத்திய புவி அறிவியல் துறை அமைச்சகம் மேற்கொள்ளவுள்ளது.
   iv. அதேபோல் உயிரியல் பேரழிவுகளை மத்திய சுகாதார நலத்துறை அமைச்சகம் கையாளவுள்ளது.
   v. உறைபனி, பனிமூட்டம், வறட்சி, சூறாவளி, பூச்சிகள் தாக்குதல் போன்றவற்றால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை மத்திய வேளாண்மை மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் கையாளவுள்ளது.
   vi. வெள்ளம், பனிஏரி உருகுவதால் ஏற்படக்கூடிய வெள்ளம் ஆகியவற்றை மத்திய ஜல்சக்தி அமைச்சகமும் நகரங்களில் ஏற்படக்கூடிய வெள்ள பாதிப்புகளை மத்திய வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகமும் கையாளவுள்ளது.
   vii. காட்டுத்தீ, தொழிற்சாலை மற்றும் ரசாயனங்களால் ஏற்படும் பேரிடர்களை மத்திய சுற்றுப் புறச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்ற அமைச்சகமும் நிலச்சரிவை மத்திய சுரங்க அமைச்சகமும் கையாளவுள்ளது.
   viii. அணு மற்றும் கதிரியக்கவியல் சார்ந்த அவசர நிலைகளை மத்திய அணுசக்தித் துறை கையாளவுள்ளது.
   ix. பேரிடர் மேலாண்மை சட்டம், 2005-இன்படி மேற்கூறிய அமைச்சகங்கள் அல்லது துறைகள் பேரிடர் கண்காணிப்பு, முன்னெச்சரிக்கை, தடுப்பு, குறைப்பு, தயார்நிலை உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளும் வகையில் இந்த முன்னெடுப்பை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது.
3. ட்ரோன்கள் மற்றும் ட்ரோன் எதிர்ப்பு அமைப்புகளின் திறன் குறித்து அடுத்த மாதம் நடைபெறவுள்ள பாதுகாப்புப் பயிற்சியின்போது சோதனை மேற்கொள்ளவுள்ளதாக

மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

i. மத்திய பிரதேசத்தில் அக்.6-ஆம் தேதி முதல் 10-ஆம் தேதிவரை ஒருங்கிணைந்த பாதுகாப்பு அமைப்பின் (ஐடிஎஸ்) தலைமையகம் சார்பில் இந்தப் பயிற்சி நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகின.

ii. போர், போர்க்களம் மற்றும் போர்களின்போதான மோதல்கள் குறித்து மத்திய பிரதேசத்தில் உள்ள ராணுவப் போர் கல்லூரியில் கடந்த மாதம் முதல்முறையாக முப்படையினர் பங்கேற்ற கருத்தரங்கம் நடைபெற்றது. இந்நிலையில், அடுத்த மாதம் முப்படைகளும் பங்கேற்கும் மற்றொரு பிரதான பயிற்சி நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

4. ஏழு ஆண்டுகளை நிறைவு செய்துள்ள ஆயுஷ்மான் பாரத், எதிர்கால தேவைகளுக்கு ஏற்ப மக்களுக்கு உயர்தரமான, அதேநேரம் செலவு குறைவான மருத்துவ வசதியை உறுதிசெய்யும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டதாகும்.

i. இத்திட்டத்தின் மூலம் பொது சுகாதார வசதியில் தேசம் புரட்சியைக் கண்டு வருகிறது. நாட்டு மக்களின் நிதி பாதுகாப்பு மற்றும் கண்ணியம் உறுதி செய்யப்பட்டுள்ளது. மனிதாபிமானம் மற்றும் தொழில்நுட்பத்தின் மூலம் மக்களுக்கான அதிகாரமளித்தலை எவ்வாறு மேம்படுத்த முடியும் என்பதை இந்தியா வெளிக்காட்டியுள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

ii. உலகின் மாபெரும் மருத்துவ காப்பீடு: ஆயுஷ்மான் திட்டம் தொடர்பான 'மைகவ்' அரசு வலைதளப் பதிவையும் பிரதமர் பகிர்ந்துள்ளார். அப்பதிவில், '55 கோடிக்கும் மேற்பட்ட பயனாளிகளுடன் உலகின் மிகப் பெரிய மருத்துவக் காப்பீடு திட்டமாக ஆயுஷ்மான் பாரத் திகழ்கிறது. சுகாதாரத் துறைக்கான அரசின் செலவினம் 29 சதவீதத்தில் இருந்து 48 சதவீதமாக அதிகரித்துள்ள நிலையில், மக்களின் சொந்த செலவு 63 சதவீதத்தில் இருந்து 39 சதவீதமாக குறைந்துள்ளது.

iii. நோய்களுக்கான சிகிச்சை செலவால் ஏற்படும் நிதி ரீதியிலான நெருக்கடியில் இருந்து லட்சக்கணக்கான குடும்பங்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மூலம், ஒவ்வொரு ஆண்டும் வறுமை நிலைக்கு சென்றுவிடாமல், 6 கோடி குடும்பங்கள் தடுக்கப்படுகின்றன' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

5. அளவில் புத்தாக்கக் குறியீட்டில் அடுத்த 3 ஆண்டுகளில் 10 முன்னணி நாடு களில் ஒன்றாக இந்தியா உருவெ டுக்கும் என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா நம்பிக்கை தெரிவித்தார்.

i. சமீபத்தில் உலக அளவிலான புதுமை படைத்தல் குறியீட்டுஎண்கள் அறிவிக்கப்பட்டன. இந்தத் தரவரிசையில் கடந்த 2015-இல் 91-ஆவது இடத்தில் இருந்த இந்தியா 2025-இல் 38 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. நமது மக்களின் திறனை இது காட்டுகிறது. உலக அளவில் புத்தாக்கக் குறியீட்டில் அடுத்த 3 ஆண்டுகளில் 10 முன்னணி நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுக்கும் என்று உறுதியாகநம்புகிறேன்.

ii. தற்போது 1.92 லட்சம் ஸ்டார்ட் அப் நிறுவனங்கள், அரசிடம் பதிவு செய்துள்ளன.

iii. ஒட்டுமொத்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களில் 52 சதவீத நிறுவனங்கள் இரண்டாவது மற்றும் மூன்றாவது நிலை நகரங்களில் அமைந்துள்ளன.

iv. மொத்த ஸ்டார்ட்-அப் நிறுவனங்களில் 48 சதவீத நிறுவனங்கள் பெண்களால் தொடங்கப்பட்டுள்ளன.

6. கனிம வளங்கள் மற்றும் கனிம வளங்கள் நிறைந்த நிலங்கள் மீது வரி விதிக்க மாநிலங்களுக்கு சட்ட அதிகாரம் உள்ளது என கடந்த ஆண்டு வழங்கப்பட்ட தீர்ப்பை

எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மத்திய அரசு செவ்வாய்க்கிழமை மேல்முறையீடு செய்தது.

i. மத்திய அரசு சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா இந்த விவகாரத்தில் கடந்த ஆண்டு உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்வதாக உச்சநீதிமன்ற நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு முன் தெரிவித்தார்.

ii. முன்னதாக, அரசமைப்புச் சட்டத்தின் பட்டியல் 1-இன்கீழ் கனிம வளங்கள் மீது வரி விதிக்க நாடாளுமன்றத்துக்கு அதிகாரமில்லை எனவும் பட்டியல் 2-இன்கீழ் கனிம வளங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசுக்கே உள்ளது எனவும் அப்போதைய உச்சநீதி மன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான அமர்வு 2024, ஜூலை 25-இல் தீர்ப்பு வழங்கியது.

iii. இந்த அமர்வில் இடம்பெற்ற நீதிபதி பி.வி.நாகரத்னா மட்டும் கனிம வளங்கள் மீது வரி விதிக்கும் அதிகாரம் மாநிலங்களுக்கு இல்லை என மாறுபட்ட தீர்ப்பை வழங்கினார்.

iv. இதைத்தொடர்ந்து, கனிமங்கள் மீது மத்திய அரசு வசூலித்த வரியை கடந்த 2005, ஏப்.1 முதல் முன்தேதியிட்டு திரும்பப்பெற மாநிலங்களுக்கு அனுமதி அளித்து உச்சநீதிமன்றம் கடந்த ஆண்டு ஆக.14-இல் உத்தரவு பிறப்பித்தது.

v. இந்தச் சூழலில், கனிம வளங்கள் மற்றும் கனிம வளங்கள் நிறைந்த நிலங்கள் மீது வரி விதிக்க மாநிலங்களுக்கு சட்ட அதிகாரம் உள்ளது. என்ற தீர்ப்பை எதிர்த்து மத்திய அரசு மேல்முறையீடு செய்துள்ளது.

7. தனது ஆற்றல் மாற்ற இலக்குகளை அடையும் வகை யில், தமிழக அரசு அடுத்த 5 ஆண்டு களில் 10,000 மெகாவாட் சூரிய மின் சக்தி உற்பத்தியை அதிகரிக்கத் திட்ட மிட்டுள்ளதாக' தில்லியில்நடைபெற்ற எரிசக்தி மாநாட்டில் மின் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித் தார்.

i. தில்லியில் இந்திய தொழில்கள் கூட்டமைப்பின் (சிஐஐ) ஏற்பாட்டில் 6-ஆவது சர்வதேச எரிசக்தி மாநாடு மற்றும் கண்காட்சி செவ்வாய்க்கி ழமை நடைபெற்றது.

ii. இந்த மாநாட்டில் தமிழக போக்கு வரத்து மற்றும் மின் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பங்கேற்றுப் பேசியது: இந்தியாவின் புதுப்பிக்கவல்ல எரிசக்தி புரட்சியில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணியில் இருந்து வருகிறது. மொத்த புதுப்பிக்கவல்ல எரிசக்தித் திறன் 25,500 மெகாவாட்டு டன் நாட்டில் 3-ஆவது இடத்தில் தமி ழகம் உள்ளது.

iii. காற்றாலை திறனில் 11,500 மெகாவாட் உற்பத்தியுடன் நாட்டி லேயே 2-ஆவது இடத்திலும், மொத்த சூரிய சக்தி 10,700 மெகாவாட்டுடன் 4-ஆவது இடத்திலும் உள்ளது. நீர் மின்சாரம் 2,323 மெகாவாட் உற்பத்தி செய்யப்படுகிறது. பிரதமர் சூர்ய கர் திட்டத்துக்கு முன்னரே தமிழ்நாட்டில் மேற்கூரை சூரிய சக்தி 239 மெகா வாட்டாகவும், இத்திட்டத்துக்குப் பிறகு 290 மெகாவாட்டாகவும் உள்ளது. இன்று, இந்தியாவின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் திகழ்ந்து வருகிறது. அதாவது, 20 ஜிகா வாட்டுக்கும் அதிகமான நிறுவப்பட்ட புதுப்பிக் கத்தக்க திறனை தமிழகம் கொண்டுள்ளது. இதில் 10 ஜிகாவாட்டுக்கும் அதி கமானவை காற்றாலை மின்சாரத்திலிருந்து மட்டுமே கிடைக்கிறது.

8. செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-

i. மார்க் ரூட்டே - நேட்டோ பொதுச் செயலாளர்

ii அன்டோனியோ குட்டெரெஸ் - ஐ.நா பொதுச் செயலாளர்

iii ஷெர்லி அயோர்கோர் போட்ச்வே - காமன் வெல்த் பொதுச் செயலாளர்